
# மாவீரர் ஜெய்ஹிந்த் செண்பகராமன்

கே.வி. சாமி s.j.சிவசங்கர்
ஸ்டாலின் குணசேகரன்



**பிறப்பால் சேரதேசத்தவராகவும், இனத்தால் தமிழராகவும், திருமணத்தால் வடஇந்தியராகவும், வாழ்க்கை நெறியால்** உலக குடிமகனாகவும் விளங்கிய, ஜெய்ஹிந்த் செண்பகராமன் பிள்ளையவர்களின் வரலாறு இந்திய திருநாட்டுக்கும் உலக தமிழர்களுக்கும் பெருமை சேர்க்க வல்லதாகும்.

மாவீரர் செண்பகராமன் திருவனந்தபுரத்தில் புத்தன் சந்தை என்ற ஊரில் சேரமன்னர் வழிவந்த சின்னசாமிபிள்ளை-நாகம்மா தம்பதியரின் மகனாக வேளாளர் (பிள்ளைமார்,முதலியார்,கவுண்டர்) குடும்பத்தில் 15-09-1891 இல் தோன்றினார். திருவனந்தபுரத்தில் மகாராஜா பள்ளியில் 5ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே பிரிட்டிஷ் அரசை எதிர்த்துப் புரட்சியில் இறங்கினார். சக மாணவர்களை ஒன்று சேர்த்து வெள்ளையர்களுக்கு எதிராக முதன் முதலாக ஜெய்ஹிந்த் என்ற முழக்கங்களை எழுப்பிப் போராட்டத்தைத் துவக்கி வைத்தார்.

சுதந்திர வேட்கைமிக்க செண்பகராமன் அவர்களை உலகம் அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. அவரது வீரமிக்க உண்மை நிறைந்த செயல், கம்பீரத்தோற்றம், ஆளுமைத்திறன், அறிவாற்றல் ஆகியன சர்வில்லியம் ஸ்டிரிக்லாண்ட் என்ற ஆங்கிலேயரைக் கவர்ந்தன. திருவனந்தபுரத்தில் மிருக வைத்தியராகப் பணியாற்றி வந்த அவர் உண்மையில் ஜெர்மன் நாட்டின் உளவாளி அவர் செண்பகராமன் அவர்களை அழைத்து தனது திட்டங்களை எடுத்துக் கூறினார். அந்தத்திட்டங்கள்

செண்பகராமன் அவர்களை கவர்ந்தன. அந்நேரத்தில் ஊரை விட்டு எங்கும் போகக்கூடாது என்று செண்பகராமன் அவர்களுக்கு பிரிட்டிஷ் அரசு தடைவிதித்திருந்தது போலீஸ் கண்காணிப்பும் அதிகமாக்கப்பட்டிருந்தது. என்றாலும் போலீசை ஏமாற்றி திருவனந்தபுரத்தை விட்டு வெளியேறி இலங்கை சென்று அங்கிருந்து ஒரு கப்பலில் இத்தாலி நாட்டிற்கு சென்றனர் . அப்போது அவரது வயது பதினைந்து தான்.

செண்பகராமன் அவர்கள் தலைமறைவான செய்தி அன்றைக்கு இந்தியா முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது . அவரது வீட்டிற்குப் பலத்த காவல் போடப்பட்டது. உறவினர்களை எல்லாம் அடிக்கடி விசாரணை செய்து தொல்லை தந்தது ஆங்கிலேய அரசு. இத்தாலி சென்ற செண்பகராமன் அவர்கள் இலக்கியம், விஞ்ஞானம் ஆகிய



துறைகளைப் பயின்றார். இத்தாலி மொழி உட்பட பல மொழிகளையும் கற்றார். பின்னர் சுவிட்சர்லாந்திற்குச் சென்று அங்கு கல்லூரி படிப்பை மேற்கொண்டார். கல்லூரியில் சிறந்த மாணவராக விளங்கினார். பொறியியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றார். தொடர்ந்து இந்திய நாட்டின் போராட்டம் குறித்தும் ஜெர்மன் நாட்டின் பல பகுதிகளில் சொற்பொழிவாற்றி வந்தார். இதன் விளைவாக அந்த நாட்டிலேயே இந்திய ஆதரவு சர்வதேச குழு என்ற ஓர் அமைப்பு உருவாகியது.

செண்பகராமன் அவர்கள் இந்திய ஆதரவு சர்வதேச குழுவின் தலைவராக பொறுப்பேற்று ஐரோப்பிய நாடுகளிடையே இந்தியாவைப் பற்றி பரவியிருந்த தவறான கருத்தை நீக்கினார். இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு உலகரங்கில் ஆதரவு திரட்டினார். இந்திய நன்மைக்காக அரும்பாடுபட்டார். தமது எண்ணங்களை தக்க விதத்தில் தெரிவிப்பதற்காக Pro India (ப்ரோ இந்தியா) என்ற பத்திரிகை ஒன்றை தொடங்கினார். ஆங்கிலேய அரசின் பொய் பிரச்சாரங்களை இந்த பத்திரிகையின் மூலமாகவும் முறியடித்தார். அதன் காரணமாகக் ஆங்கிலேய அரசு செண்பகராமன் அவர்களின் திருப்பெயர் இந்திய நாட்டில் மட்டுமின்றி பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் அனைத்திலும் பரவவிடாமல் விழிப்புடன் இருந்தது தடையும் செய்தது இதனால் இந்திய மக்களில் ஒருசிலரை தவிர மற்றோருக்கு செண்பகராமன் அவர்கள் ஆற்றி வந்த அரும்பணியினை அறிந்துக்கொள்ள முடியாது போயிற்று.

செண்பகராமன் அவர்களின் பெருமைகளையும் அறிவாற்றலையும் அறிந்து கொண்ட கெய்சர் சக்கரவர்த்தி அவரைத் தமது அந்தரங்க நண்பராக நியமித்துக் கொண்டார். சிறுது சிறிதாக செண்பகராமன் அவர்களின் புகழ் ஜெர்மன் முழுவதும் பரவியது. அவர் இல்லாது அரசு விழாவோ, விருந்தோ இல்லை என்ற நிலை உருவாகியது. அவரது திறமைகளைப் பாராட்டி ஜெர்மன் அரசு அரசின் உயரிய விருதான வொன் (von) என்ற பட்டத்தை வழங்கி அவரைச் சிறப்பித்தது. இந்தியா மட்டுமல்லாமல் உலகில் அடிமைப்பட்டுக் கிடக்கும் எந்த நாடாக இருந்தாலும் சரி அதன் அடிமைத்தனம் நீங்கப்பட வேண்டும் என்ற உன்னதமான கொள்கைக்குச் சொந்தக்காரராக திகழ்ந்த செண்பகராமன் அவர்கள் League of oppressed, People of



orientship போன்ற சங்கங்களைத் தெடங்கிப் பாடுபட்டார். இவற்றின் கிளைகளை நிறுவுவதற்காக பர்மா, துருக்கி, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்றார். ஆப்பிரிக்கா கண்டத்தில் தலைக்காட்டிய நிறவெறி, செண்பகராமன் அவர்களின் உள்ளத்தில் போராட்ட கனலை மூட்டியது. இனவெறியை ஒழிப்பதற்காக கலிபோர்னியா சென்றார். நிறவெறிக் கொடுமைகளுக்கு ஆளான நீக்ரோ மக்களுக்கு நீதிகிடைக்க பாடுபட்டார். அதன் பொருட்டு அன்றைய அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனைச் சந்தித்து தனது சங்கத்தின் இலட்சியங்களை எடுத்துரைத்தார்.

ஆனால் அமெரிக்க அதிபர், எங்கள் நாட்டு மக்களின் விருப்பத்திற்கு மாறாக என்னால் நடக்க இயலாது என்று சொல்லவே. செண்பகராமன் அவர்கள் அமெரிக்க நாடு முழுவதும் அலைந்து மனித உரிமைகள் குறித்து வீரமுழக்கம் செய்தார். நிறவெறியர்கள், இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் நமது நாட்டிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடுவதா என்று வெகுண்டனர். செண்பகராமனாரின் மீது ஆத்திரம் கொண்டனர். இந்நிலையில் செண்பகராமன் அவர்களின் சொற்பொழிவினால், தன்னலமில்லா தொண்டினையும் கண்டு அவரைத் தங்களின் தலைவராக கருதினர். இந்நிலை அமெரிக்க வெள்ளையினத்தவர்களை மிகவும் ஆத்திரத்திற்கு உள்ளாக்கியது. ஆனால் செண்பகராமன் அவர்கள் அம்மக்களில் ஒருவரை தலைமை பொறுப்பில் அமர்த்தி அம்மக்களுக்கு உண்மையாக பாடுபட கூறி நிறவெறி கொடுமையிலிருந்து மீள வழிக்காண்பித்து தனது இலட்சியப் பயணத்தை தொடர்ந்தார். இதனால் பிரிட்டிஷ் அரசை தொடர்ந்து அமெரிக்கா, பிரிட்டன் அரசுகளும் தொல்லை தர துவங்கியது மூன்று நாடுகளைச் சேர்ந்த காவல்துறையினரும், இராணுவத்தினரும், ஒற்றர்களும் செண்பகராமன் அவர்களைப் பிடிக்க திட்டம் தீட்டினர். அதனை அறிந்த செண்பகராமன் அவர்கள் மாறுவேடம் அணிந்து வேறுபெயரில் பாஸ்போர்ட் பெற்று அமெரிக்காவை விட்டு வெளியேறி ஆப்பிரிக்கா அடைந்தார். அங்கேயும் அவரது இலட்சியப் பயணம் தொடங்கியது. அங்கு அடிமைப்பட்டு அவதியுற்ற மக்களுக்காக மக்களின் விடுதலைக்காகப் போராட முனைந்தார், இதனையும், செண்பகராமன் அவர்கள் அங்கு இருப்பதனையும் அறிந்த ஆங்கில அரசு, அவரை எப்படியும் அவரை எப்படியாவது கைது செய்துவிட வேண்டும் என்பதில் தீவிரம் காட்டியது. பிரிட்டிஷ் அரசால் தேசத்துரோக குற்றத்திற்காக தேடபட்டு வரும் இந்தியாவைச் சேர்ந்த தீவிரவாதி செண்பகராமனை உயிருடனோ, பிணமாகவோ கொண்டு வருபவருக்கு 1லட்சம் பவுன் பரிசளிக்கப்படும் என்று அறிவித்தது, ஆம் மாவீரர் செண்பகராமன் அவர்களை உயிருடனோ, பிணமாகவோ பிடித்துக் கொடுப்போருக்கு 1இலட்சம் பவுன் பரிசளிக்கப்படும் என மேற்கண்ட அறிவிப்பினை ஏந்திய சுவரொட்டிகள் பிரிட்டிஷ் அரசால் ஒட்டப்பட்டன.ஒற்றர்கள் பலரும் அவரை வட்டமிட்டனர். வலையில் வீழ்த்த திட்டமிட்டனர். மதகிரி என்ற பெண் ஒற்றர் தனது திறமைகளை எல்லாம் பயன்படுத்தி பார்த்தும் முடியவில்லை. செண்பகராமன் அவர்கள் தப்பித்துப் பெர்லின்



உட்ரோ வில்சன்

சென்று விட்டார்.

நமது இந்தியதிருநாட்டில் காந்தியின் தலைமையில் அறவழிப் போராட்டங்கள் நடைபெற்றது என்றாலும், காந்தியின் வருகைக்கு முன்பிருந்தே பலர் அறவழியில் விடுதலைப் போராட்டத்தை மிக உத்வேகத்துடன் நடத்தி வந்தனர். சிலர் தேசவிடுதலைக்காக ஆயுதம் ஏந்தி வெள்ளையர்களை எதிர்த்து தாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அத்தகைய போராளிகளுக்கு செண்பகராமன் அவர்கள் ஜெர்மனியிலிருந்தவாறே ஆயுத உதவிகளைச் செய்து வந்தார். இந்திய ஆதரவு சர்வதேச சங்கத்தின் உறுப்பினர்களையும், ஆங்காங்கே சிதறிக்கிடத்த இந்தியர்களையும் ஒன்று திரட்டி இந்தியன் நேஷனல் வாலண்டியர் கோட்ஸ் I.N.V என்ற முதல் இந்திய ராணுவத்தை உருவாக்கினார். இந்தப்படை ஜெர்மன் அரசின் உதவியுடன் இந்தியாவை பிரிட்டிஷ் அரசின் பிடியிலிருந்து விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். என்ற உடன்பாடு கெய்சரால் நிறைவேற்றப்பட்டது. இந்தப்படையின் தலைமைப் பொறுப்பை செண்பகராமன் அவர்கள் ஏற்றார். இந்தப்படை வெற்றிப் பெற்றால் இந்தியா விடுதலை பெறும், இந்தியா விடுதலைப் பெற்றால் அதன் முதல் குடியரசுத் தலைவராக செண்பகராமன் அவர்கள் பொறுப்பேற்று கொள்ள வேண்டும் என்பது கெய்சரின் எண்ணமாக இருந்தது.

1914 ஆம் ஆண்டு முதல் உலகப்போர் தொடங்கியது. பிரிட்டனுக்கும், ஜெர்மனுக்கும் கடும் போர் நிகழ்ந்தது. அச்சமயம் தான் ஒர் செய்தித்தாளின் வாயிலாக தன் மானசீக குருவான தமிழர் தந்தை அய்யன் வ.உ.சி அவர்கள் ஆங்கில அரசினால் கைது செய்யப்பட்டு இரட்டை ஆயுள் தண்டனை அடைந்து சிறையில் பல துன்பங்க ளுக்கு ஆளாக்கப்பட்ட தனையும் அறிந்து கோபமுற்ற செண்பகராமன் அவர்கள் ஆங்கில அரசை மிரட்டுவதற்காகவும், தமிழர் தந்தை அய்யன் வ.உ.சி அவர்கள் கைது செய்யப்பட்டதை கண்டுத்தும் செப்டம்பர் 24 ஆம் நாள் புகழ்பெற்ற எம்டன் என்னும் நீர்மூழ்கிக் கப்பலை இயக்கி சென்னைக்கு வந்து ஜெயிண்ட் ஜார்ஜ் கோட்டையைத் தாக்கிச் சென்று ஆங்கில அரசை கதிகலங்கச் செய்தார். வரும் வழியில் சூயஸ்கால்வாயில் நின்று கொண்டிருந்த பிரிட்டிஷ் கப்பல்கள் பலவற்றை நிர்மூலமாக்கிவிட்டே அவர் சென்னைக்கு வந்தார். சென்னையில் தாக்குதல் நடத்திய செண்பகராமன் அவர்கள் அடுத்து பாண்டிச்சேரி சென்றார். அங்கே ஏற்கெனவே கிடைத்த தகவல் படி துறைமுகத்தில் காத்துக் கொண்டிருந்த சுத்தானந்த பாரதியைச் சந்தித்து அவரிடம் கைப்பெட்டி ஒன்றைக் கொடுத்து அதனை சுப்பிரமணிய சிவாவிடம் சேர்க்கும் படியும் அவரை விசாரித்ததாக கூறவும் என தெரிவித்து, வ.உ.சி அவர்கள் நலன் பற்றியும், தற்சமய நிலவரங்களையும் கேட்டறிந்து. ஜெய்ஹிந்த் என்று முழக்கமிட்டார். பின்னர் சிங்கப்பூர் நோக்கிச் சென்றார். அப்போது அவருக்கு வயது இருபத்தி மூன்று தான். புரட்சி இயக்கத்தை சேர்ந்த வாஞ்சிநாதன் கலெக்டர் ஆஸ்துரையை சுட்டுக்கொள்ளப் பயன்படுத்திய அந்த கைதுப்பாக்கி செண்பகராமன் அவர்கள் வழங்கியது தான் என கூறப்படுகிறது.





1930ஆம் ஆண்டில் செண்பகராமன் அவர்கள் இந்திய வர்த்தக சங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அந்தச் சமயத்தில் அவர் திருமதி காமா எனும் வீராங்கனையின் மகளான இலட்சுமிபாய் அவர்களை திருமணம் செய்து கொண்டார். வியன்னா நகரில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் பங்கு பெற்ற செண்பகராமன் அவர்களை அம்மாநாட்டில் கலந்துக் கொண்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சந்தித்தார்.





செண்பகராமன் அவர்களின் பண்பும், உண்மையான வீரம்நிறைந்தச் செயல்பாடுகளும், அவர்தம் கம்பீரத்தோற்றமும், ஒழுக்க மான வாழ்க்கை நெறியும், கொள்கைகளும், நேதாஜியை கவர்ந்தன. செண்பகராமன் அவர்களின் வழியைப் பின்பற்றி அவரை தமது முன்னோடியாக, குருவாகக் கொண்டு புது உத்வேகத்தில் வீரநடைப் போட்டார். நேதாஜிக்கு முன்னோடியாக, குருவாக விளங்கியவர், தமிழரே







என்பது உலக தமிழினத்திற்கே பெருமை சேர்ப்பதாகும்.

செண்பகராமன் அவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை முறியடிப்பதற்கு மெசபடோமியா யுத்தத்தைப் பயன்படுத்தினார். செண்பகராமன் அவர்களின் I.N.V என்னும் முதல் இந்திய தேசிய இராணுவத்தின்




ஆற்றலைக் கண்டு ஆங்கிலேயர்கள் அடைந்த அச்சத்திற்கு அளவே கிடையாது. முதலாம் உலகப்போர் நான்கு ஆண்டுகள் நடைப்பெற்றது. இறுதியில் ஜெர்மன் தோல்வியுற்றது போர்நிறுத்தப்பட்டு ஒப்பந்தம் ஏற்ப்பட்டது. வெர்சேல்ஸ் எனப் பெயர் பெற்ற அந்த ஒப்பந்தத்தில் பலசரத்துகள் இருந்தன. அதில் முக்கியமான ஒன்றாக மாவீரர் செண்பகராமன் அவர்களை பிரிட்டனிடம் ஜெர்மன் அரசு ஒப்படைக்க வேண்டும் என்பதாகும். ஆனால் இந்தச்சரத்துக்களை ஜெர்மன் அரசு ஏற்க மறுத்துவிட்டது. ஜெர்மன் அரசு தோல்வியை தழுவினாலும் கூட அது இந்திய சுதந்திரப் போருக்கு எந்தவிதத்திலும் தோல்வியை அளிக்கவில்லை. மாறாக புதிய ஆற்றலையும், புத்துணர்வையும் ஏற்படுத்தியது. செண்பகராமன் அவர்கள் வழியைப் பின்பற்றி I.N.A எனும் இரண்டாம் இந்திய தேசிய இராணுவ படையை நேதாஜி உருவாக்குவதற்கு அடித்தளம் அமைத்து தந்தது.


செண்பகராமன் அவர்கள் ஜெர்மனியில் வாழ்ந்தகாலத்தில் அங்கு பண்டிதர் ஜவஹர்லால் நேரு, மோதிலால் நேரு, நேதாஜி, வித்தல்பாய் படேல், தாதாபாய்நெளரோஜி, உட்பட பலர் அவரது ஜெர்மன் இல்லத்தில் விருந்தினராகத் தங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. ரஷ்யப் புரட்சியை உருவாக்கிய லெனினும், செண்பகராமன் அவர்களும் நட்புறவுடன் திகழ்ந்திருக்கிறார்கள். லெனினும் செண்பகராமன் அவர்களும் அடிக்கடி சந்தித்திருக்கின்றனர். விடுதலை இயக்கங்களுக்கு லெனின் ஆதரவு அளித்து வந்ததால், அவரைப் பாராட்டுவதற்கு ஜெர்மனியிலிருந்து ஒரு குழு சென்றது. அதில் முதன்மையான இடம் பெற்றவர் செண்பகராமன் ஆவார். ஜார்ஜ் ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்து ஜெனீவாவில் தலைமறைவாக இருந்த லெனினை செண்பகராமன் அவர்கள் பலமுறை இரகசியமாக சந்தித்திருக்கிறார். காபூலில் செண்பகராமன் அவர்கள் முதல் சுதந்திர அரசை அமைத்தபோது லெனின் அதற்கு வாழ்த்து செய்தி அனுப்பி இருந்தார். இதிலிருந்து லெனின் உள்ளத்தில் செண்பகராமன் அவர்கள் மாபெரும் இடத்தைப் பிடித்திருந்தார் என்பது விளங்கும்.



ஜெர்மனியில் இருந்த காலத்தில் செண்பகராமன் அவர்களுக்கும் நாஜிக்களின் தலைவரான அடால்ஃப் ஹிட்லருக்கும் தொடர்பு ஏற்பட்டது. இருவரும் நெருங்கிப் பழகினர். நண்பர்களாக திகழ்ந்தனர். ஒரு நாள் இருவரும் உரையாடிக்கொண்டிருந்த போது ஹிட்லருக்கும், செண்பகராமன் அவர்களுக்கும் கருத்து மோதல் ஏற்பட்டது. ஹிட்லர் இந்தியத்திருநாட்டையும், இந்தியபெருமக்களையும் பற்றி இழிவாக பேசினார். இந்தியர்களுக்கு சுதந்திரம் பெறுவதற்குரிய திறமையோ தகுதியோ கிடையாது என்று கூறினார் ஹிட்லர். உடனே கொதித்தெழுந்த செண்பகராமன் அவர்கள் இந்திய நாட்டின் பரம்பரை, பாரம்பரிய பெருமை குறித்தும், இந்திய தலைவர்களின் மகத்தான திறன் குறித்தும் ஒரு நீண்ட சொற்போர் புரிந்தார். அவரது முழக்கத்தைக் கேட்ட ஹிட்லர் தனது தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டார். வெறும் வார்த்தையால்







தாதாபாய் நௌரோஜி

கேட்டால் போதாது. எழுத்து வடிவில் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றார் செண்பகராமன் அவர்கள். வேறு வழியின்றி ஹிட்லர் எழுத்து மூலம் தனது மன்னிப்பைக் கேட்டுக்கொண்டார். உலகையே நடுங்கவைத்த ஹிட்லரை அடிபணியவைத்த பெருமை மாவீரர் செண்பகராமன் பிள்ளை எனும் தமிழரையே சாரும். இந்த நிகழ்ச்சி நாஜிக்களை கொதிப்படைய செய்தது. யாருக்கும் தலைவணங்காத நமது தலைவர் ஹிட்லர் செண்பகராமன் அவர்களிடம் தலைவணங்க நேர்ந்து விட்டதே என்று எண்ணி எண்ணி நொந்தனர். அவரிடம் வெறுப்பைப் பொழிந்தனர் செண்பகராமன் அவர்களை நேருக்கு நேராக மோதிமோதியோ வெல்ல என்பதனாலும், செண்பகராமன் அவர்களுக்கு நாஜிக்களால் தொல்லை ஏற்படுவது வெளியே தெரியநேர்ந்தால் உலகமெங்கும் உள்ள ஒட்டுமொத்த விடுதலை இயக்கங்களின் எதிர்ப்பையும் சந்திக்க நேரும் அதுமட்டுமின்றி ஜெர்மனியிலே நாஜிக்கள் தங்களுக்கும், தங்களின் தலைவரான ஹிட்லருக்கும் பெரும் எதிர்ப்புக் கிளம்பும் என்பதனை உணர்ந்த நாஜிக்கள் செண்பகராமன் அவர்கள் கலந்து கொண்ட அரசாங்க விருந்து ஒன்றில் நயவஞ்சகமாக அவரது உணவில் ஆளை மெதுமெதுவாக கொல்லும் தன்மை கொண்ட நஞ்சினை கலந்து விட்டனர். இந்த நஞ்சு தனது வேலையைச் செய்யத் தொடங்கியது. அதனால் செண்பகராமன் அவர்கள் நாளாக நாளாக மிடுக்கையும், பொழிவையும் சிறிதாக இழந்தார். இறுதியில் உடல்நலம் குன்றிப்படுக்கையில் வீழ்ந்தார்.

ஹிட்லர் செய்த வஞ்சம் தான் தன்னைப் படுத்த படுக்கைக்கு ஆளாக்கிவிட்டது. என்பதனை நன்கு உணர்ந்த செண்பகராமன் தன் ஆயுட்காலம் குறிகிவிட்டது என்பதனையும் அவர் புரிந்து கொண்டார். தன் மனைவி இலட்சுமிபாயைத் தன்னருகில் அழைத்து, தனது இறுதி இலட்சியத்தை எடுத்துரைத்தார். இந்தியநாட்டின் விடுதலையைக் காணாமலே என் ஆவிப்பிரியப் போகிறது. என்றாலும் நான் இறந்த பின்னர் எனது சாம்பலைப் பாதுகாத்து வைத்து, எனது பிறந்த நாட்டுக்கு எடுத்துச் சென்று. ஒருபகுதியை என் அன்னையின் சாம்பல் சங்கமமான கரமணை ஆற்றில் கரைத்துவிடவும், மறுபகுதியை நாஞ்சில் நாட்டின் வளமிக்க வயல்களில் தூவிவிடவும் அது மட்டுமல்ல பிரிட்டிஷ் அரசை நான் எதிர்த்துப் போராடியது போலவே எனது மறைவுக்குப் பின்னர், நீயும் போராட்டத்தை தொடர வேண்டும் என்றார். இலட்சுமிபாய் தன் கணவரின் கடைசி ஆசையை நிறைவேற்ற ஒப்புக்கொண்டார் என்றாலும் அவர் மரணமடையப் போகிறாரே என்பதை எண்ணி கண்ணீர் மல்க துயரத்தில் ஆழ்ந்தார்.

1934 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாளன்று மாவீரர் செண்பகராமன் அவர்களின் இன்னுயிர் அவரது உடலை விட்டு நீங்கியது. இம்மாவீரனின் மரணம் குறித்து மற்றொரு மற்றொரு செய்தியும் பரவலாக கூறப்படுகிறது. அதாவது தன் மரணம் இவ்விஷத்தால் நீங்கியதாக இருக்க கூடாது என்று தன் மனைவியிடம் கைதுப்பாக்கியால் தன் மார்பில் சுடும்படி வேண்ட கண்ணீர் மல்க கைகள் நடுங்க, நெஞ்சம் படபடக்க தன் கணவரின் மரண ஆசையை நிறைவேற்றினார். அம்மாவீரனின் வீரமனைவிக்கு இக்காரணத்தால் பைத்தியக்காரி பட்டம் கட்டி மனநல மருத்துவமனையில் சேர்த்சேர்த்திருக்கின்றனர். நாஜிப்படைகள்.

செண்பகராமன் அவர்களுக்கு பிடித்தமான லில்லி மலர்களை நீல நிறரிப்பனில் கட்டி

அவரது உடலின் மீது வைத்து அஞ்சலி செலுத்திய இலெட்சுமிபாய் தன் கணவரின் உடலைக் கட்டிக்கொண்டு அவர் கதறியழுத காட்சி நாஜிக்களைக் கூட கலங்த வைத்தது. இவ்வீரப்பெண் தன் கணவனை இழந்ததற்காக அழவில்லை, இந்திய மாதா தன் வீரப்புதல்வர்களில் ஒருவரை இழந்து விட்டாளே என்றே அழுதார். கணவரின் மறைவு இலெட்சுமிபாயை வருத்தியது என்றாலும், கடமை அவருக்கு தெம்பை ஊட்டியது. முக்கியமான ஆவணங்களை எல்லாம் எடுத்துப் பதுக்கி வைத்து விட்டார். அவர் எதிர்பார்த்தப் படியே நாஜிககூட்டம் அவரது வீட்டிற்குள் புகுந்து சோதனையிட்டது. ஹிட்லர் கைப்பட எழுதிய மன்னிப்புக்கடிதத்தை தேடியது. அது அவர்களுக்கு அகப்படவே இல்லை. நாஜிப்படை இக்கடிதத்தை தேடிய நிகழ்வு ஹிட்லர் சிறுவயதில் ஒரு பெண்ணுக்கு காதல் கடிதம் எழுதியதாகவும் பின்னர் அவர் நாஜிக்களின் தலைவரான பின் நாஜிப்படையை அனுப்பி தேடினார் என திரித்துக் கூறப்பட்டது. இதுவே இன்றும் கூட நூல்களில் உண்மைக்கு மாறாக எழுதப்பட்டு வருகிறது.

நாஜியர்கள் செண்பகராமன் அவர்களை வழிதொடர்ந்த சில விசுவாச நண்பர்களை இரகசியமாக கைது செய்து கொடுமைப்படுத்தியும், கொன்றும், ஆனந்தமடைந்தனர். இலட்சுமிபாயையும் கொடுமைப்படுத்தினார். அவரை மனநல மருத்துவமனையில் சேர்த்தனர். மாவீரரின் மனைவியான அவர் மருத்துவமனையிலிருந்து தப்பித்து ஜெர்மனியிலிருந்து இத்தாலிக்சென்று, பின்னார் ஸ்பெயின் நாட்டை அடைந்து பம்பாய் வந்து சேர்ந்தார். அத்தனை கஷ்டங்களிலும் தன் கணவரின் சாம்பலை விடாது கொண்டு வந்தார். செண்பகராமன் அவர்கள் மறைவுக்குப் பின்னர் இந்திய ஆதரவு சர்வதேச சங்கம் வலுவிழந்து போயிற்று. அதன் உறுப்பினர்கள் ஆளுக்கொரு பக்கமாகப் பிரிந்து சென்று விட்டனர்.

1936இல் பம்பாயை அடைந்தார் இலட்சுமிபாய். தன் கணவரின் நினைவிலே வாழ்க்கையைக் கழித்தார். தன் கணவரின் கடைசி விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அரும்பாடுபட்டார், என்றாலும் காலம் கனியவில்லை. 1966 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அதாவது செண்பகராமன் அவர்கள் மறைந்த 32 ஆண்டுகளுக்குப் பிறகு ஐ.என்.எஸ் டில்லி எனப்பெயரிடப்பட்ட இந்தியாவின் முதல் போர்க்கப்பலில் செண்பகராமன் அவர்களின் சாம்பலை எடுத்துக்கொண்டு எர்ணாகுளத்திற்குச் சென்று, சாம்பலின் ஒரு பகுதியைக் கரமணை ஆற்றில் கரைத்தார். அத்துடன் செண்பகராமன் அவர்களை முதல் குடியரசுத் தலைவராக கொண்ட நாடு என்ற உலகளாவிய புகழை இந்தியா இழந்து. சாம்பலின் மற்றொரு பகுதியை நாஞ்சில் நாட்டின் வளமிக்க வயல்வெளிகளில் தூவிவிட்டார். ஒரு போர்க்கப்பலில் தாயகம் திரும்ப வேண்டும் என்ற இலட்சியத்துடன் திகழ்ந்த செண்பகராமன் அவர்கள் மரணமடைந்த தருவாயிலே அவரின் சாம்பலை சுதந்திர இந்தியாவில் ஒர் போர்க்கப்பலின் வாயிலாக எடுத்து வந்து அவரது கடைசி விருப்பத்தை நிறைவேற்றினார் இலெட்சுமிபாய்.

இலெட்சுமிபாய் தன் கணவரின் கடைசி விருப்பத்தை நிறைவேற்றி விட்டு மறுபடியும் பம்பாய் சென்று அங்கேயே வாழ்க்கை நடத்தி வந்தார். உலகளாவிய புகழ் கொண்ட ஒரு மாவீரனின் மனைவி மிகவும் கஷ்ட ஜீவனம் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 1972 ஆம் ஆண்டு பம்பாயில் இலெட்சுமிபாய் வசித்து வந்த வீட்டின் கதவு இரண்டு மூன்று நாட்களாகத் திறக்கப்படாமல் இருந்தது. எனவே அக்கம், பக்கத்தில்

வசித்தவர்கள் காவல்துறையினரக்குத் தகவல் தந்தனர். காவல்துறையினர் வெகுநேரம் கதவைத் தட்டியும் கதவு திறக்கப்படாமல் இருக்கவே கதவை உடைத்து உள்ளே சென்றனர். அப்போது அவர் மயக்கமுற்ற நிலையில் இருந்தார். அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் மரணம் ஏய்தினார்.

அவரால் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள் பம்பாய் காவல்துறையினரால் எடுத்துச் செல்லப்பட்டன. பின்பு அவைகள் டில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்த ஆவணங்கள் செண்பகராமன் அவர்களின் வீர, தீர, தீயாக வாழ்க்கை உலகிற்கு எடுத்துரைக்கும் பெட்டகங்களாக திகழும் என்பது திண்ணம். மாவீரர் செண்பகராமன் அவர்களின் வரலாறு இருட்டடிப்பு செய்யப்பட்டதன் காரணம் ஏன்? முக்கிய ஆவணங்கள் கிட்டியும் மறைக்கப்பட்டது ஏன்? தமிழன் என்ற காரணத்தினாலோ. அது ஆண்டவனுக்கே, அன்றைக்கு இந்தியாவை ஆண்டவர்களுக்கே வெளிச்சம்.

எவ்வாறாயினும் அவரதார புருஷர்கள், மாவீரர்கள் மரணிப்பதில்லை என்ற கூற்று மெய்யுறும் வகையில் சில வரலாற்று ஆய்வாளர்கள் இம்மாவீரர் வீரவரலாற்றை சிறு சிறிதாக மீட்டெடுத்தனர். இவ்விந்திய மக்களும், அரசும் ஜெய்ஹிந்த் என்று முழங்குகின்றனரே. இம்முழக்கத்தை தந்தருளியவரே இம்மாவீரன் தான் என எடுத்துரைத்தனர். இதன் விளைவாக தமிழக அரசும், கேரள அரசும் இம்மாவீரனைக் கொண்டாடியது. தமிழரான செண்பகராமன் அவர்களை கேரள அரசு தன் மாநிலத்தவர் என பெருமையுடன் கொண்டாடி வருகிறது. 2006 டாக்டர் மு.கருணாநிதி தமிழக முதல்வராக இருந்த போது செண்பகராமன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை வருங்கால சந்ததியினரும் தெரிந்து கொள்ளும் வகையில் பபள்ளியில் பாடமாக சேர்க்கப்பட்டது. சென்னை காந்தி மண்டபத்தில் அன்றைய முதல்வர் கருணாநிதி அவர்களின் முயற்சியில் மாவீரர் செண்பகராமன் அவர்களின் முழுவுருவ வெண்கலச் சிலை வைக்கப்பட்டு அவராலே திறந்து வைக்கப்பட்டு மரியாதைச் செலுத்தப்பட்டது. ஜெய்ஹிந்த் செண்பகராமன் அவர்களின் வீர,தீர தியாகத்தை போற்றுவோம்.



**ஜெய்ஹிந்த்**